**செ. வெ. எண் – 483** **நாள்–31.7.2007**

<u>**செய்தி வெளியீடு**</u>

பதிவு செய்யப்பட்டு சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதற்காக 22.3.2007 அன்றுள்ளவாறு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏ-வின் கீழ் நிலுவையிலிருக்கும் ஆவணங்களை விரைவாகத் தீர்வு செய்யும் பொருட்டு **சமாதானத் திட்டம்** ஒன்று பதிவுத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டு 24.4.2007 முதல் 23.7.2007 வரை மூன்று மாதங்களுக்கு அமலில் இருந்தது. இத்திட்டத்தின்படி, சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புப் படி செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக்கும் ஆவணதாரர்களால் ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வைக்கும் இடையே உள்ள வித்தியாசத் தொகையில் 60 சதவிகிதம் மட்டும் செலுத்தி நிலுவையிலுள்ள ஆவணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்தை மேலும் நீட்டிக்கக் கோரி கோரிக்கைகள் வரப்பெற்றதையடுத்து இத்திட்டத்தை 24.7.2007 முதல் 23.8.2007 வரை மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டித்து ஆணையிடப்பட்டுள்ளது. இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏ-வின் கீழ் நிலுவையாக உள்ள ஆவணதாரர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.